# தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 18.] MADRAS:—SUNDAY MAY, 1, 287. A. S. [Monthly, 4 Annas.


சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.


| | |
|---|---|
| பழயனகழிதலும் புதியனபுகுதலும், முதலிய. | ஆவஸ்தாத்திரையங்கள். |
| வியவசாயரசாயனம். | உடையவர்சரித்திரம். |
| | வர்த்தமானசங்கிரகம். |


**இங்கிலாந்து லௌகிகசங்கம்.**—மாதாந்தர நிர்வாகசபை ஜனவரிமீ 5உ கூடியது. மிஸ்டர் பிராட்லா அக்கிராசனதிபதி. சென்னைச்சாகை சங்கத்தார் உபகாரநிதிக்கு 4பவுன் 2ஷிலிங் 6 பென்ஸ் அனுப்பினார்களென்று மிஸ்டர் பார்டர் உறிக்கைசெய்ததின்பேரில், சென்னைச்சாகையார் தங்கள் இங்கிலீஷ் ஏழைசோதரர்களுக்கு உபகாரமாய் விராளம்அனுப்பினதற்காக அவர்களுக்கு வந்தனக்கடிதம் எழுதும்படி சபாநாயகரைக் கேட்டுக்கொள்ளவேண்டியதென்று மிஸ்டர் பிராட்பானால் பிரேரேபிக்கப்பட்டு, மிஸ்டர் சௌடனால் ஆமோதிக்கப்பட்டு, யாவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

மேற்படிவிஷயத்தை யனுசரித்து, நாஷனல் சிக்கியூலர் சோசைட்டியின் சென்ற நிர்வாகசபையிலே, அந்த சோசைட்டியின் சென்னைச்சாகையார் சுவக்கியானிகள்உபகார நிதிக்குச் சகாயமாக கைபொப்பமனுப்பி யெழுதிக்கொண்ட கடிதம் வாசிககப்பட்டதைக் கேட்க வெகு ஆனந்தமுண்டாயதென்றும், சென்னையிலுள்ள நமது கூட்டாளி மெம்பர்களுக்கு மகா சமுத்திரத்தைக்கடந்து செல்லும்படி நன்றி கூர்ந்த வந்தனம் அனுப்புகிறோமென்றும்நாஷனல்ரிபார்மரில் எழுகியிருக்கிறது. சென்னைசாகை மெம்பர்கள் தாங்கள் அனுபபிய அற்பதொகை அவ்வளவு அன்புடனே அங்கீகரிக்கப்பட்டதற்காக உள்ளபடி சந்தோஷிக்கிறார்கள். அந்த உபகாரநிதி பாத்திரமானதாகையால் அதற்கு உதவிபுரிவது அவசியமானதுபற்றி இவ்வருஷம் தொகை அதிகமாயிருக்குமென்று கோருகிறார்கள்.

---

ராஜா ஸர். டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வோகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.

**பழயன சழிதலும் புதியன புகுதலும். அதாவது—பழமையில் (தீமையையொழித்து) நன்மையைக்காத்துக்கொள்வதும், புதுமையில் நன்மையை ஏற்றுக்கொள்வதும்.**

---

இந்தியாவானது இரண்டு பிரபலமான நாகரீகங்கள் சேர்ந்திருக்கிற ஸ்தானமாயிருக்கிறது. பழமையானவைகளும் விஸ்தாரமிருக்கின்றன, புதுமையானவைகளும் விஸ்தாரமிருக்கின்றன. அவற்றை பாத்திராபாத்திர மறியாமலாவது அவ்விரண்டுள் ஒன்றையேயாவது ஏற்றுக்கொள்ளலாகாது. தெரிந்துதெளிவதில் விவேகத்தை உபயோகிக்கவேண்டும். சாஸ்திரக்கியானத்திலோ, நவீனமே சிலாக்கியமுள்ளது. நல்லொழுக்கத்திலோ, அநேக சகாப்தங்களாய் உண்டாகி நமக்குத் தொன்றுதொட்டுவருகிற—சாந்தம், தயை, தன்னொடுக்கம், விஸ்வாசம், நன்றியறிதல், அடக்கம், பொறுமை, தருமம், உபகார சிந்தை, மரியாதை, துரைத்தனத்திற்கு அமைவு, அமரிக்கையிலும் ஒழுங்கிலும் பிரியம், இப்படிப்பட்ட—பழமையான அநேக ஒழுக்கங்கள் சிறந்தவைகளாயிருக்கின்றன; அவைகள் வைத்துக்கொள்ளப்படத்தக்கவையே. இப்படிப்பட்டவைகளை யெழுதினால் ஒரு பெரிய ஜாபிதாவாகும், அது நமக்குப் பெருமையே. ஆயினும், தைரியம், தூயகுணம், சுயாதீனம், கடைப்பிடிப்பு, கிரமம், பிறர்நன்மைவிரும்பல், முதலிய சில நவீன ஒழுக்கங்களையும் ஏற்றுக்கொள்ளலாம். அப்பிரகாரமே, டம்பமல்லாத வாழ்க்கை, அடக்க ஒடுக்கம், குடும்ப ஆசை, ஏழை பந்துஜனங்களை சந்தோஷத்துடனே ஆதரித்தல் இப்படிப்பட்ட நமது ஒழுக்கங்களும் வழக்கங்களும் நடவடிக்கைகளும் ஓர்அளவுக்குக் காப்பாற்றப்படத்தக்கவைகளே. சாவகாசமிருக்குமாகில், நம்முடைய சிற்பம், கவிசாதுரியம், சித்திரம், சங்கீதம் முதலிய விநோதக்காட்சி விசித்திரவித்தைகளில் சிலவற்றை நான் எடுத்துக கூறியேயிருப்பேன்; இவைகள நன்குமதிக்கப்படத்தக்கவைகளே.

### பூர்வீகதுரைத்தனநிலைமை.

இந்தியாவின் பூர்வீக துரைத்தன நிலைமையானது தற்காலத்தியதைப்பார்க்கினும் சீராய் இருந்ததென்று சிலர்வெகுதுணிச்சலாய்ச் சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்ளமாட்டீர்களென்று நம்புகிறேன். துரைத்தனத்தைப்பற்றிய பூர்வீக மனோரதங்கள்வசனகாவியங்களிலும் செய்யுட் கிரந்தங்களிலும் எழுதப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கின்றன. அந்த மனோ கற்பிதங்களில் சிறந்தது கூறியதுகூறியபடியே குறைவற நமக்குக் கிடைத்திருந்தாலும், இந்தியாவானது அதின்பேரில் குறைகூறவேகூறும். தற்கால நிலைமையைப்பற்றிப் பேசுவோம், இங்கிலீஷ் துரைத்தனகாலத்திற்குமுந்தியிருந்த எந்த கவரன்மெண்டையும் இந்தியாவானதுபொறுத்துக்கொள்ளுமென்று நான் நினைக்கவில்லை. இந்தியாவிலே இங்கிலீஷ் துரைத்தனமானது நமக்கு எக்காலத்திலும் இருந்திராத ஒப்பற்ற சிறந்த துரைத்தனமென்கிற உண்மையை தாராளமாய் நன்றிகூர்ந்து ஒப்புக்கொள்ளவேண்டும். அது மகாபராக்கிரமமும் மகா நீதியுமுள்ளது. இந்தியாவிலுள்ள நானாவிதஜாதி ஜனங்களுக்கும் பலவகையான பிரயோஜனங்களுக்கும் மிகவும் தகுந்ததாயிருக்கிறது. குடிஜனங்கள் கல்வித்தேர்ச்சி முதலிய நாகரீகத்தில் விர்த்தியாகஆக அதற்கேற்றபடி தானே ஆதரிப்பதற்கும் நூதன ஏற்பாடும் ஒழுங்குஞ்செய்வதற்கும்தானே மிகவுஞ் சக்தியுள்ளது.

### இந்தியா சுயாதீனமுள்ளதாகமாட்டாது.

மனோரதமுயிராமல், உள்ளபடி உலகத்தின்நிலைமையையெவ்வளவாவது கவனித்திருக்கிற ஒவ்வொருவனும் இனிவரும் தீர்க்ககாலவரையில் இந்தியாவானது சுயாதீனமாய் தன்னரசு செலுத்துகிற தேசமாகமாட்டாதென்று தெரிந்துகொள்ளவேண்டும். அதனுடைய சுகவாழ்வும், உற்சாகமும், விர்த்தியும், செல்வமும், ஏதாவதொரு பலமும் நீதியும் உதாரத்துவமுமுள்ள அதிகாரத்தின் சிறகுகளுக்குள் இருப்பதினாலேதான் உண்டாகவேண்டும். அப்படியாயின் எந்த துரைத்தனம் இங்கிலீஷ் துரைத்தனத்தைவிட உத்தமமானதாயிருக்கிறது? துர்ப்பலமும மருளுமுடைய இந்தியாவானது, பராக்கிரமமுள்ள ஆதரவையும் சவரட்சணையும் இல்லாவிட்டால்,கொடுங்கோலரசுகொள்ளைக்குத்தான் உள்ளாய்விடும்! வாசித்த புத்திமான்கள் இந்த உண்மைகளை உள்நுழைந்து நன்றாய் ஆராய்ந் தறியவேண்டும்.

—o—

## வியவசாயரசாயனம்.


(66-வது பக்கத் தொடர்ச்சி.)


பிரோமயின் அல்லது இலவணத்திப்பி, இது இலவணமூலத்தைப்பார்க்கிலும் அருமையானபூதம். கடல்ஜலத்தில் விசேஷமாக கலந்திருக்கும். கடல்நீரிலிருக்கும் உப்பை எடுத்துவிட்டால் அதில் சேஷமாக நிற்கிற பதார்த்தந்தான் இலவணத்திப்பி; இது சுத்தமாயிருந்தால் சிவப்பான அதிக பளபளப்புள்ள எண்ணைபோலிருக்கும்; இதின் கந்தம் இலவணமூலத்தினது கந்தத்தைப்பார்க்கிலுங் கொடியது. இதனுடைய ஆவி சிவந்திருக்கும். ஜலத்தோடு சற்றே கலக்கும், இது ஜீவமூலத்தோடு கலந்து காரத்திரவ மென்கிற ஒரு அருமையான பதார்த்தம் உண்டாகிறது. பிராணிகளுடைய எலும்புகள் இந்ததிரவத்தினாலும் சுண்ணம்பினாலும் ஆகின்றன. நமது எலும்பு தசை நரம்புமுதலியவும் நாம் உண்ணுகிற ஆகாரத்தினால் குழந்தைப்பருவத்திலிருந்து வளருவதால் நாம் உண்கிற ஆகாரத்தில் மேற்படி பதார்த்தம் விசேஷமாக கலந்திருக்கவேண்டும். ஆதலால் நாம் உண்ணுகிற பாலிலும் பலவித தானியங்களிலும் கிழங்குகளிலும் மாம்ஸாதிகளிலும் இந்ததிரவம் விசேஷமாக கலந்திருக்கின்றது. இது இல்லாமற்போனால் கந்தமூலங்கள் முளைக்கவேமுளையா. நிலமானது பாழடைந்து ஒன்றையுமுண்டாக்காது. ஆகையால்தான் நூ

க்கப்பட்ட எலும்புகளும் சுடப்பட்ட எலும்புகளும் மிகவும் பிரயோசனகரமான எருவாகின்றன.

கிளோரயின், பிரோமயின், ஐயோடயின், பிளோரயின். என்னும் இந்த நான்குபூதங்களும் ஒன்றுக்கொன்று மெத்த சம்பந்தப்பட்டனவாகத் தோற்றுகின்றன. இவைகளிலமுதற்சொல்லப்பட்டது சாராயத்தோடு பூரணமாககலந்துபோய்விடும்.

**ஐயோடயின்.** இது கெட்டியான பளபளப்புள்ள பூதம். இதன் ஆவி இந்திர நீலவர்ணமுடையது; இதன் கந்தம் மேற்சொன்னவைகளைப்போன்ற தானாலும் அவ்வளவு கொடியதல்ல. இது சமுத்திரஜலத்திலும் சமுத்திர ஓரங்களிலும் முளைத்திருக்கும் சாதாளைமுதலிய பூண்டுகளிலிருந்து எடுக்கப்படுகின்றது.

**பிளோரயின்.** இது தனியா யிருப்பதில்லை. பவுல்ஸ்பார் என்னும் ஒருவிதகல்லிலிருந்து எடுக்கப்படுகின்றது. இதன்பொடியை கந்தகத்திரவத்தோடு கலந்தால் ஜலமூலத்திரவமென்கிற அருமையான பொருள் உண்டாகின்றது. இந்த ஜலமூலத்திராவகத்தை கண்ணாடியில்விட்டால் அது கண்ணாடியைக கரைத்துவிடும்.

**ஸ்படிகமூலம்.** இந்தப் பிரயோசனமுள்ள பூதமானது பிராணவாயுவோடு கலந்து பரிசுத்தமான பளிங்குக் கல்லாகிறது. இந்த பரிசுத்தமான பளிங்குகல்லுதான் ஸ்படிகமூலசத்து (அல்லதுசிலிக்ஆசிட்) என்று சொல்லப்படுவது. இது ஸ்படிகக்கல் நெருப்புக்கல் பருக்காங்கல் பாறுங்கல் களிமண்முதலிய பல பொருள்களுக்கு ஆதாரமாயிருக்கின்றது.

## லோககாரிய பூதங்கள்.

**காரமூலம்.** இது மரச்சாம்பலென்னப்பட்ட வஸ்துவிலிருந்து எடுக்கப்படும் லோகம். இதுவெள்ளியைப்போல் வெளுத்து கெட்டியாயும் கொஞ்ச நீலவர்ணமாயுமிருக்கும். இது காற்றுப்பட்டால் உடனே ஜீவமூலத்துடன் கலந்து காரம் அல்லது மரவுப்பை உண்டாக்கும். இதை ஜலத்தின்மீதுவிட்டால் தீபற்றி எரியும். இலவணகாரம் இது பொட்டால்லியத்தைப்போல் ஒருவிதலோகம், கல்லுப்பைப்போலிருக்கும். இதை சலத்தோடு சேர்த்தாலும் அல்லது ஜீவமூலத்தில் சுட்டாலும் சோடாஎன்கிற ஒருவிதகாரத்தை யுண்டாக்கும். **சுண்ணமூலம்** இது சுண்ணாம்புக்கு ஆதாரமானபூதம், இதுவும் சுத்தகரிதிரவமுஞ் சேர்ந்துதான் பலவித சுண்ணாம்புக்கற்கள் உண்டாகின்றன. இது சுத்தமாயிருக்கும்பொழுது பொன்னைப்போல் பசுமையாயும் ஜலத்தைப்பார்க்கிலும் அதிக பளுவாயும் இருக்கும். இது காற்றுள்ளவிடத்தில் சுடப்பட்டால் பிரகாசத்தோடு எரிந்து சுடுசுணணாம்பு ஆய்விடும். சுண்ணாம்பும் இலவணமூலமுஞ்சேர்ந்து வஸ்திரங்களைச் சுத்திசெய்ய உதவுமொருவித சவுட்டுமண் ஆகின்றது.

**காந்தக்கல்.** இதிலிருந்து மெக்னிஷியா என்னுங் காந்தபஸ்பம் செய்யப்படும். காந்தத்தை ஜீவமூலத்தில் தகித்தால் காந்தபஸ்பமாகும். இது மிருதுவான பசையுள்ள ருசியற்ற சற்றுவெளுமையான ஒருவித பொடிமருந்துக்கு மெத்த உபயோகமானது.

**படிகாரமூலம்.** இதுஒருவிதகளிமண். சுத்திசெய்யப்பட்டால் நேத்தியான வெளுத்த பிரகாசமுள்ள பொடியாயிருக்கும். இது படிகாரமெனனும் லோகத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது. ஜீவமூலமும் படிகாரமூலமுஞ் சேர்ந்துதான் படிகாரமென்னும்லோகமுண்டாகும். படிகாரத்தை சுட்டால் அதிலிருக்கும் ஜீவமூலம்நீங்கி படிகாரமூலமாய்விடும்.

**அயம்.** இதுபஞ்சலோகங்களில் ஒன்று. இது மனிதருக்கு மிகவும் பிரயோசனமுள்ளதாயும் உலகத்தில் எங்கும் நிறைந்ததாயும் இருக்கின்றது. இரும்பு சன்னம் கலந்திராதமண் காண்பதரிது. இது ஜீவமூலத்தில் உருகி பிரகாசமாக எரிந்து அயபஸ்பம் உண்டாக்கும். மேலும் இரும்பானது கரிமூலத்தோடுசேர்ந்து எஃகுஎன்னும் பதார்த்தமாகும். பலவிதத்திரவங்களோடு சேர்ந்து பலவித உப்புகளாகும்.

**காந்தப்போலி.** இது சுத்தமாயிருந்தால் எஃகைப் போல வெளுத்திருக்கும். இது காற்றிலிருக்கும் ஜீவமூலத்தை நிதானமாக கிரஹித்துக்கொள்ளும். இதனிடத்தில் ஜலத்தைப் பிரிக்குந் தன்மையுண்டு. இது கண்ணாடி செய்வோருக்குமெத்த உபயோகமுள்ளது. இதைக் கொண்டுதான் கண்ணாடிகளுக்கு ஒருவித நீலவர்ணமுண்டாக்குவார்கள். இது ஜீவமூலத்தோடு சேர்ந்து பலவித பஸ்பமாகும்.

இவ்வாறு லோகசூன்னியமான, ௧௧-பூதங்களும் லோககாரிகளான-௭-பூதங்களும் சத்திரமேகந்தமூலாதிகள் பயிர் ஆவதற்குக் காரணமாயிருக்கின்றன.

த—னி.

---

## அவஸ்தாத்திரையங்கள்.

---

உயர்ந்தமலைகளையும் தாழ்ந்த கணவாய்களையும் வெருவியோடும் நதிகளையும் பரவிச்சூழும் ஆழிகளையும் உடைய இவ்வுலகம் சகல சம்பத்துகளுக்கும் உறைவிடமாகவிருக்கின்றது. மனிதராகிய நாமோ உற்பவகாலந்தொடங்கி அறியாமையென்னுமிருள் நமது ஞானவிழிகளைக் கப்பப் பிறவிச்குருடராகவேயுள்ளோம். இத்தகைமையான நமது வாழ்நாட்களைத் தொடர்ந்துவரும் அவஸ்தைகள் மூன்று. அவை ஜாக்கிரம், சொற்பனம், சுழுத்தியெனப்படும்.

(௧) ஜாக்கிரத்தின்கண்ணே மனிதராகிய நாம் பிரிதிவியாதி பூதங்களின் குணங்களையறிந்தவராய் அவைகளுக்கிணங்க நடந்தும் அவ்வாறு நடவாக்கால் இடுக்கணடைந்தும் வருகின்றோம்.

(௨) (*a*) சொர்ப்பனத்தின்கண்ணே நம்மவரிற் சிலர் பூதவியல்பிற்கு விரோதமாய் சடலில் கனத்தகல் மிதந்ததாகவும், தீக்குழியிலிடப்பட்ட மனிதன் குளிர்ந்திருந்ததாகவும், எலும்புபெண்ணானதாகவும் பூட்டிவைத்துள்ள கதவு தானே திறந்துகொண்டதாகவும், நரிகள் பரிகளானதாகவும், பரிகள் நரிகளானதாகவும், ஆண்பனை பெண்பனையானதாகவும்தாசிவீட்டிற்கிள்ளின அரைக்கீரை கோயிலுள்ள இலிங்கத்தின்மீது வில்வமாய்த் திரிந்திருந்ததாகவும், செங்கல்லுகள் செம்பொன்னாகத் திரிந்துஆற்றிலிடப்பட்டு அட்டிற்றரப்பட்டதாகவும் கண்டுகளிப்பர்.

(*b*) சிலர்கல் கன்னிகையானதாகவும், பூமிமுழுவதையும் ஓரடியால் அளந்ததாகவும், புவனங்களையெல்லாம் வயிற்றிற்குள் வைத்துக்கொண்டதாகவும், கடலின் மத்தியில் பால்போன்ற சலத்தின்மீது நித்திரைசெய்வதாகவும், பால் குடிக்கும் பாலகன் விபசாரஞ் செய்ததாகவும் கண்டுகளிப்பர்.

(*c*) சிலர் தந்தையில்லாமல் மைந்தன் பிறந்ததாகவும், ஜலத்தை மதுவாக்கினதாகவும், உலகத்தின் ஒருபுறத்தினின்று உலகமுழுவதையும் ஒருங்கே கண்டதாகவும், அலைகள்மோதும்கடல்மீது உலாவினதாகவும், வானத்தினின்று அன்னமழை பொழிந்ததாகவும், அல்ப போஜனத்தை அனேகருக்குப பங்கிட்டுக் கூடைகூடையாக மீத்தினதாகவும் கண்டுகளிப்பர்.

(*d*) இன்னுஞ் சிற்சிலர் பற்பலவாய் சொர்ப்பன கற்பனைகளைக் கண்டுகளிப்பர்.

(௩) சுழுத்தியின்கண் உள்ள மனிதர் யாவரும் தம்மையும் தம்மைச்சூழ்ந்து உள்ள பிரபஞ்சத்தையும் மறந்து மனோசெயல் துறந்தவராய்நித்த நித்தம் சற்றுநித்திரைபெற்றுய்வர். ஆகவே மக்கள் ஜாக்கிரத்திலும் சுழுத்தியிலும் அடையும் பலாபலன்கள் ஒரு நேர்மையினவாக விருக்க சொர்ப்பனத்தினிடத்தே யுதிக்கும் பலாபலன்கள் மாத்திரம் வேறுபாட்டினதாக விருக்கின்றதல்லாமல் இயல்பிற்கு விரோதமாகவும் இருக்கின்றன.

ஆனால் நம்மவரிற் சிலர் இவ்வாறு இயல்பிற்கு விரோதமாய் சொற்பனத்தின்கண்ணே காணும் காட்சிபேதத்தோற்றத்திற்குக்காரணம் நமது ஞானவிழிகள்மீதுகப்பியுள்ள அறியாமையெனவறிந்து, அனுபவக்கியானமாகிய பணியின்மீது விசாரணையென்னும்கூடத்தால் செய்யப்பட்ட பற்பல சாத்திரச் சிலாக்குகளைக்கொண்டு, அறியாமையெனும் படாத்தை உரித்தெறியத்தலைப்பட்டார்கள். இச்சூட்சியைப்பெற்று தமது பிறவிக்குருட்டை நிவிர்த்திபெற்றவர்கள் சிலர். இவர் சிலராகையாலும், இவர் செய்யும் கிர்த்தியங்கள் சிறந்துளவாதலாலும், இவரது தீரத்துவம் மற்றவர்களுக்கில்லை யாதலாலும் இவர்களை மற்றவர் (கோமணங்கட்டாதஊரில் கோமணங்கட்டினவராக) மதித்து நிந்தித்து வருகின்றனர். ஆகவே இச்சிலரிலும் சிலர் நிந்தனை பொருதவராய் தெரிந்த கண்ணும் தெரியாததுபோல் திருட்டுக்குருட்டு வேடம்போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வேடதாரிகளின் விவேகத்தின்பயனென்னை! விவேகமில்லாதவருக்கு விவேகம் போதித்தல்கூடும். விவேகமிருந்தும் விவேகமில்லார்போல் நடிப்பவருக்கு விவேகம்கூறியும்பயனென்னை! உண்மையாய் நித்திரைசெய்பவனைத் தட்டியெழுப்பலாம், நித்திரைசெய்பவனைப்போல் நடிப்பவனைத் தட்டியெழுப்புவது அசாத்தியம். ஆகவே இவர்கள் தாங்களே விவேகிகள் எனத் தத்தம்செய்கைகளால் வெளியில்வந்தால் வரட்டும், அல்லவேல் தூஷணைக்கஞ்சி எஞ்சியவர்போல் அஞ்ஞானப்படுகுழியில் வீழினும்விழட்டும். அறியாமையால் கெடுபவரை விடுதலைசெய்யககூடும், ஆணவத்தால் கெடுபவரை விடுதலை செய்ய யார்திறம்? இதனை யிவர் அறியாததென்னை! பரிதாபம்! பரிதாபம் !!

குன்றெனுந்திரத்தை குலதெய்வமாகக் கொண்டுள்ளமற்றைய சிலர் நன்மையைக்கெடுக்கும் நிந்தை, நிந்தையல்லவென்றும், நன்மையைக்கடைப்பிடியாமை நிந்தையாமென்றும், தீரமில்லாதவர்க்கு தீரமானகிர்த்தியங்களைச் செய்துகாட்டி பின்னர் அவரை அக்கிர்த்தியங்களைச் செய்யும்படி உசாவுதல் நலமென்றும், பிறவிக்குருடு நீங்கியதற்கொப்ப விப்புவியின்கண் தப்புகள்கடிந்து ஒப்புகள் நடாத்தி நிற்கின்றனர். இவரைத்தான் தத்துவவிவேசினி உத்தமவிவேகிகள் எனக்கூறும். இவர் நெறியைத்தான் அறிந்தொழுகும்வண்ணம் மற்றவர்க்குபதேசிக்கும். ஆகவே சொற்பனவஸ்தையின்கண் எழும் [illegible]ப்பனகாட்சிக

ளால் மயக்குறும் மாத்சர்யாவரும் திடசித்தம்பெறறு மடத்தனம அற்று மறத்தொழில்நீங்கி அறத்தொழில் ஓங்கிவருவரேல் பயனும் பண்பும் உடையரொன்பதற்கையமில்லை.

D.

## உடையவர் சரித்திரம்.

இந்த தென்னிந்தியாவில் காஞ்சிநாட்டில் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்து, பரமாசாரியென்று எழுந்தருளி. தங்கள் வமிசத்தார் சோம்பேறி சுகசீவனம் பண்ணக்கட்டுக்கதைகயைக்கட்டி மகத்துவங் கற்பித்து, அனேகரை வஞ்சித்துப் பொருள்பறிக்கச் செய்திருக்கிறஅனேகவித ஏற்பாட்டுக்கொள்கைகளில், இதுவுமொரு பெருத்த மோசவிதக்கொள்கையென்று பல திருட்டாந்தங்களினால் மெய்ப்பிக்கவேண்டியது ஆவசியகமாயிருக்கிறதென்று நினைக்கிறேன். அதாவது-உடையவர் அவதாரம்-பரமபதத்தில் பாமபத நாதனுக்குப் பிராட்டியார் கால் வருடிக்கொண்டிருக்கும்போது, புருஷாகாரமாய் ஷெ நாதனைநோக்கி இவ்வுலகில் சீவராசிகள் உஜ்ஜீவிக்காமல் நாசப்படுகிறார்களே கிருபை செய்யவேணுமென்று விண்ணப்பம்பண்ணினார். அதற்கவர் கிரேதாயுகத்தில் தத்தாத்திரேயராய் நாம் அவதரித்து ஆசாரிய சிஷிய பாவனைகாட்டினதற்கு நம்பாமற்போனார்கள்; திரேதாயுகத்தில்தசரதகுமாரனான இராமாவதாரம் பண்ணி உன்னை முன்னிட்டு ராவணசம்மார முதலானதைச் செய்து நான் பரனென்று காட்டினேன், அப்போதும் நம்பாமற்போனார்கள்; துவாபர யுகத்தில் கிருஷ்ணவதாரம் பண்ணி, காளிங்க நிர்த்தனம் செய்து, கோவர்த்தனகிரியைக் குடையாக வெடுத்து, சூரியனைச் சக்கரத்தால் மறைத்து, மனிதரால் செய்யப்படாத ஆச்சரியங்களைச் செய்து நான் பரனென்று சொன்னேன்; அப்போதுங் காரடி வித்தைக்காரனென்று அசட்டை செய்து நம்பாமற்போனார்கள். இப்படி யெல்லாம் அன்றுதொடங்கி கஷ்டப்பட்டும் நம்பாமற்போனார்களே! நானென்னசெய்வேனென்று பரமபதநாதன் சொல்ல. அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆதிசேஷன் தலையெடுத்துநோக்கிப்பார்த்ததற்கு "உன்னாலே ஆகுமா" வென்று நாதன் கேட்க "உத்தரவானால் செய்கிறே" னென்று சேஷன்சொன்னதற்கு உத்தரவுகொடுத்தோம், நீபோய் சீவர்களைஉஜ்ஜீவிக்கச் செய்யென்று சொன்னாராம். அப்போது மானைக் காட்டி மானைப்பிடிப்பார்போல, இவரும் மனிஷாவதாரஞ்செய்தாரென்கிறார்கள். அப்படி ஸ்ரீபெரும்பூதூரில் ஆசூரி கேசவாசாரிக்குப் புத்திரனாய்ப்பிறந்து, யாதவப்பிரகாசரிடத்தில் வாசித்து, சன்னியாசம் பெற்றுக்கொண்டு தங்கள் வமிசபிராமணரில் எச-பேரை ஆசாரிய சிம்மாசனாதிபதிகளென்று ஏற்படுத்தினர். ஷெ யாதவப்பிரகாசருடைய குமாரத்திகள் இரண்டுபேர் நன்றாய் வாசித்தவர்களாயிருந்து, சாத்திரயுக்தப்படி விதவைகளான நாங்களுனக்குப் பணிவிடை செய்கிறோமென்று கேட்டுக்கொண்டதற்குத் தம்மிலும் அதிகமாய் வாசித்திருக்கிறபடியால், தம்முடைய எண்ணத்துக்கு விரோதம் பண்ணுவார்களென்றே தம்முடைய சன்னியாசத்துவத்தை நிலைக்கவொட்டார்களென்றே அங்கிகாரம்பண்ணாமல், தள்ளிவிட்டனர், அவர்கள் கோபங்கொண்டு வடக்கே நெடுந்தூரம்போய், அவ்விடத்தில் நெடியராய், தடியராய், மூடராய், முரடராயிருக்கிற பிரஜைகளைப்பார்த்து அவர்களுடன் பேசி வசப்படுத்தி, உடையவர் மதமென்று தாபனம் பண்ணி, சாதிபேதமில்லாமல் கூட்டி; சகல மாமிசங்களையும் கள்ளு சாராயங்களையும் உடையவர் விக்கிரகத்துக்கு அமிசை செய்வித்து, கோலாகலமாய் குடித்தும் புசித்தும் ரவுகலவுச்சவமென்று பேதமில்லாமல் புணர்ச்சி செய்ததினாலே, சீக்கிரத்தில் அனேகருஞ்சேர்ந்து, மதக்கூட்டமும் பெருத்து, அதற்குத் தகுந்த சரமகைங்கரிய சாத்திரங்கள் மந்திரங்களென்று உண்டாக்கி, உடையவர் தென்தேசத்து இராஜாக்களையும் பிரஜைகளையு மயக்கி இரங்காகோயிலுக்கு ஆஸ்திகளைச் சேர்த்துக்கொண்டிருக்கிறதால், அவரை மோசம்பண்ணவும் தங்களை எந்தவினைப்பினால் நீக்கினரோ அந்தப்படி அவருக்கு விரோதமாய் துன்மதம்செய்து வெற்றிபெற்றோமென்றதாகவும் காட்ட, தென்தேசத்தில் இரங்கமெனற பரமபதத்தைச் சேவித்தால் முத்திமோக்ஷம் அடையலாமென்று அந்த ஸ்திரீகள் அவர்களில் 10 பேருக்கு போதித்து, வேஷகுலக்ஷணமா யனுப்புவித்தார்கள். அவர்கள் குரங்குகளை வந்து சேவித்தார்கள். அவாள் காத்திராகாரத்தையும் வைஷ்ணவகோலத்தையும் பார்த்து நீங்கள் யார் திருவடியில் ஆசரித்தவர்களென்று கேட்டதற்கு உடையவர் திருவடியில் ஆசரித்தவர்களென்றார்கள். அனுஷ்டானமென்னவென்றுகேட்டார். சகல மாமிசமும் சாராயமும் கள்ளும் ரவுக்கை வுச்சவமு மென்று ஒளியாமல்சொன்னார்கள். நாம் துரத்திவிட்ட யாதவப்பிரகாசருடைய விதவைப்பெண்கள் நமக்கு விரோதமாய் துன்மதத்தை யுண்டாக்கினார்களென்று துக்கப்பட்டு, உடனேஎவ்விதத்திலாவது அவ்விடத்துக்கு நாம் போயதை யழிக்கவேணுமென்று கோபங்கொண்டு புறப்பட்டார். இவர்போனால் இவ்விடத்தில் காரியங்களெல்லாம் கெடுதியாகுமென்று ஒரு பிராமணன்பேரில் இரங்கநாதன் ஆவேசம்வந்ததுபோலே வந்து, உடையவர் போகக்கூடாதென்று தடுத்து, மடக்கிப்போட்டார்கள். நம்முடைய எண்ணம் பூர்த்தியாகவொட்டாமல் விதவைகள் செய்தார்களென்று அதுவேதுக்கமாய் (வாயிலடித்து வயிற்றிலறைந்துகொண்டு) இறந்தார். அவர் உயிரோடிருக்கும்போதே தன்னைப்போலவிக்கிரகம் ஏளச்செய்து, அதைத்தான்தழுவி தன்னுடைய சத்தை அதற்குக்கொடுத்து, பிறகு தன்னுயிரையும் அந்த விக்கிரகத்துக்குக் கொடுத்து,திருநாட்டுக்கேளினாரென்றும், திருமஞ்சன காலத்தில் முத்துமுத்தாய்வியர்வைவொழுகுகிறதென்றும். அவர் பரமாசாரியரென்றும்,அவர்லீலாவிபூதிக்கும் நித்திய விபூதிக்கும் உடையவரென்றும், அவரைத் துதித்தவர்களுக்கே முத்திமோக்ஷமென்றும், அவரல்லாமல் பரமபதநாதன் மோக்ஷம் சாதிக்கக்கூடாதென்றும், அவரைத்துதிக்க சகலமந்திரமும் அடங்கிய இராமாநுஜ நூற்றந்தாதியென்று ஒரு தமிழ் அந்தாதிசெய்து, அதைச் சகலத்திராளும் பாராயணம்பண்ணி அனுஷ்டிக்கவேணுமென்று, ஜனங்களை மயக்கிக் கொள்ளைக்கிடம்பண்ணி நாராயணனென்று சொன்னாலும் துதித்தாலும் பிரயோசனமில்லை, இராமாநுசரென்று வுடையவரைச்சொல்லவும் துதிக்கவுமாயிருந்தால் மோட்சமென்று கற்பித்து ஷெ ஸ்ரீபெரும்பூதூரில் மூட அரசர் முதலான பலரால் கோயிலைக்கட்டி, அவர் தகப்பனை கேசவப்பெருமாளென்றும், அவரை உடையவரென்றும், விக்கிரகங்கள் வார்ப்பித்து, பல சாதியாரைக்கொண்டு உச்சவாதிகள் செய்து, பெருமையாராட்டி இதுவு மொரு கொள்ளைக் கிடம் பண்ணிக்கொண்டார்கள். இப்படி இத்தேசத்தார் ஊருக்கொரு கோயிலை முன்னிட்டுக் கொள்ளைக் கொடுக்கிறதுமல்லாமல், எச சிம்மாசனாதிபதி ஆசாரிகள் பெருகி எங்கும் பரவி, அனேக ஏற்பாட்டின்வழியாய் பயமுறுத்தி, கொள்ளையடிக்கிறார்கள். முதலில் தத்தாத்திரேயராயும், உ-வது இராமனாயும், ங-வது கிருஷ்ணனாயும் அவதாரம்பண்ணி அலைந்து வேசாரி கால் கை கடுப்பெடுத்து அசந்து படுத்திருக்கிறவருக்கு பிராட்டிகால் கைமடிக்கலாச்சுதோ? பரமபதநாதன் சர்வவல்லவனாய் மூன்று அவதாரம்பண்ணியும் மாளாமற்போனதை நிறைவேற்ற நாதனுக்குப் பாயலாயும் மிதியடியாயும் குடையாயுமிருக்கிற பாம்பான ஆதிசேஷனுக்கு மாத்திரம் வல்லபமெப்படியுண்டாச்சுதோ? அப்படியானால் விதவைஸ்திரிகள் இவருக்குவிரோதமாய்சாத்தானிய மதத்தையுண்டாக்கி, அந்த மதஸ்தரை இவர்சந்ததியாருக்குப்பங்காளிப்போராட்டத்தை யுண்டுபண்ணி உலகம் நிறையச்செய்ததை ஏன் தடுக்கவில்லை? பாண்டிய

னுக்குப் பயந்து வெள்ளைவஸ்திரம் உடுத்து ஓடி ஒளித்துக்கொள்ள வேண்டியதென்ன? டிலலிபாக்ஷா அனுப்பிய சேவர்களுக்குப்பயந்து பறைச்சேரியில் ஒளித்துக்கொள்ள, உங்களிஷ்டப்படி மூன்றுநாளைக்கு நீங்கள் மேல்கோட்டை - செல்லப்பிள்ளையை எதேச்சையாய் கோயிலுக்குட்புகுந்து ஆராதனை முதலானதுஞ் செய்துகொள்ளலாமென்று வாக்குத்தத்தம் பண்ணி பறையர் கேட்டுக்கொண்டபடி யிடங்கொடுத்து நடந்தேறிவருகிறதே. துறத்திக்கொண்டுவந்த டில்லிமனுஷனை துரத்திவிடச் சத்தியில்லாமற்போனதென்ன? வாதஞ்செய்தபோது திரைக்குள்- ௧000- சிரசைக்கொண்டு தர்க்கம்பண்ணினவர்தேப்பெருமாள்உத்தரவுபடி ஆசூரிகேசவாசாரி பெண்சாதிவயிற்றில் உதிக்கப்போகிற இவர் திருக்கச்சிநம்பிக்கு-௧000-சிரசுகளை சொலித்து தரிசனையாகி ஷை ஆசாரிவீட்டு சாக்கடைக்கால வழியாகப்போய் ஷை யாள்வயிற்றில் தங்கினர்? திருவேங்கடத்தானுககு நாமம்போட சர்ப்பரூபங்கொண்டு கோடுவழியாய் உள்நுழைந்து நாமமுதலான சின்னங்களை தரித்தவனென அவர்-௧000-படத்தைக்காட்டி பாண்டியனையும் டில்லிச்சேவகரையும் ஏன் செயிக்கவில்லை? மேற்கண்ட விதனை ஸ்திரிகளை பணிவிடைக்கு வைத்துக்கொண்டால் சாத்தானிமதம் விரோதமாயுண்டாகாதே? நம்மிலும் அதிகமாய்வாசித்திருக்கிறதால நம்முடைய எண்ணத்தைக் கெடுப்பார்களென்று துறத்திவிட்டதாயிருக்கலாம். இவர்களைத் துறத்தினால் நமக்கு விரோதமதஞ்செய்வார்களென்று பூர்வக்கியானமில்லாமல்போனவர் பரமபதத்திலிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு வந்தாரொன்றுஎப்படிநம்பக்கூடும்? நான் செய்கிறேனென்று நாதனிடத்திற்சொல்லிவந்தது என்னமாயிற்று? ஒருபாப்பான் தங்கள்வமிசத்தார் பிழைக்கவும் தன்னைப்பரமாசாரியென்று புகழ்ந்து துதித்து வழிபாடுசெய்யவும் செய்த கற்பனைகளை யோசிக்காமல் தொண்டு பூண்டு சகலவிதத்திலும் நெடுநாளாய் மோசம்போகிறது ஆச்சரியமாயிருக்கிறது. முதல் பார்ப்பாரசுவாமிகள, உ-வது பூண்டி பண்டாரசுவாமிகள், ௩-வது சாத்தானிய சுவாமிகளாயிருக்கிற இவர்களை, எல்லாரும் வணங்கிக் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. இவைகளல்லாமல் உடையவர் பாண்டியனுக்குப் பயந்து மேற்கே ஓடிப்போனவிடத்தில் சுருனங்குடிக்கிராமத்தில் வெண்களிமண் தாவள்ளியமாயிருக்கக்கண்டு, இதை வைஷ்ணவசின்னமாய் நெற்றிமுதலான இடங்களில் வைத்து ஸ்தாபித்தால் வைஷ்ணவமதம் இன்னமும் பலப்பட்டு நம்மை பரமாசாரியென்றும் நம்புவார்களென்று ஷை மண்ணுக்கு திருமண்ணென்றும் நாமமென்றும் அலங்காரப்பேரிட்டு, நெற்றியிலிடும்போது தன்னுடைய பேரால் தனியன் மந்திரமுதலானதை செபித்துப்போடக்கற்பித்துவிட்ட இரண்டு திருமண்கோட்டை எம்பெருமான் திருவடிகளென்றும், அதின்மத்தியில் மஞ்சள் கோடிட்டு பிராட்டியார் உருவமென்றும், இகபரசாதனமென்றும் கற்பித்து தன்னால் ஏற்படுத்திய ஆசாரிகள்கொள்ளைக்கு அங்கமாகவும் செய்ததினால் உலகமெல்லாம் பரவி இந்தமதத்திலடங்கிய சகல சாதியாரும் மூடபக்தி சிரத்தையாய் திருவடிச்சின்னமாய், வரவர அகலமாயும் தளமாயும் அல்லது துவாதசநாமம் திருமண்போட்டு வீண்காலம் கழித்தும், நாமம் திருச்சூரணம் கிரையம்கொடுத்து வாங்கி ஒரு குடும்பத்துக்கு ௴ ௧-க்கு ௧-உ- அணா வீதம் ௵ ௧-க்கு ௧-ரூபா-உ-ரூபா இறுத்தும் நாடோறும் நெற்றி முதலான விடங்களிலிட்டு அதைக்கழுவி சாக்கடையில் விடுகிறதாயிருக்கிறது. இவருக்குமுன் மலை கோபிக்கல்லை யுரைத்து நெடுக்கிடுதல் குறுக்கிடுதலென்று மதக்குறியாய் போட்டிருந்ததற்கு விபரீத கற்பனை பண்ணி நஷ்டத்தையும் கஷ்டத்தையும் பிறமதஸ்தரில் பழிப்பையும் சனங்களடையச் செய்திருக்கிறார்.

A. V.

—o—

## வர்த்தமானசங்கிரகம்.

சென்ற புதுவெள்ளிக்கிழமைகாலை தேவாராதனைக்குசிறப்புற்றோங்கிய வைஸ்ராய் அவர்கள், கவுண்டெஸ் ஆவ் டவ்ரின் அம்மா அவர்களும் பரிவாரங்களும் புடைசூழ்ந்துவர, டோரா திருச்சபைக்குச் சென்றார்கள். அந்தத் தேவாலயமணிகூண்டில் பெரிய தேன்வண்டுக்கூட்டம் ஐந்துவருஷகாலமாயிருந்தது. அந்த வண்டுகள் அக்காலமுழுவதும் ஒருவருடைய ஜோலிக்கும்போகாமல் அமரிக்கையாகவே இருந்தன. மணியடிக்கிற சௌகிதார் திருச்சபைக்கு வைஸ்ராய் அவர்கள் வருவதினிமித்தம் வழக்கத்துக்குமிஞ்சி மணியடித்துத் தனது அதிகபாராக்கிரமத்தைக் காட்டினதினால் அவை சஞ்சலப்பட்டுக்கலைந்தனவோ, அல்லது வைஸ்ராய் அவர்களோடு கூடச்சென்ற பாடிகார்டின சிவப்புச்சட்டைகளும், திருச்சபையின் வாயிலண்டை தங்கள் ஸ்தானத்திலே அஞ்ஞானிகளாகிய படைவீரர்கள் வந்திருப்பதும் அவற்றிற்குச் சரிப்படவில்லையோ நானறிந்திலேன். ஆனால் அவை கூட்டமாக இறங்கிவந்து அந்தக்கட்டடத்திற்கு வெளியிலிருந்தவர்களெல்லோரையும் கொட்டின. அதினாலுண்டான கலபையை விவரித்துச்சொல்லுவதைப்பார்க்கிலும் இன்னபடியிருக்குமென்று நினைத்துக்கொள்வது சுலபமாயிருக்கும். வைஸ்ராய் அவர்களும் அவருடைய பரிவாரமும் அதிஷ்டவசாத்தாய் தேவாலயத்திற்குள் பிரவேசித்துவிட்டார்கள், கதவுகள் மூடிவிடப்பட்டன, அவர்கள் சுத்தமாய் தப்பித்துக்கொண்டார்களென்று நம்புகிறேன். வெளியிலிருந்த பாடிகார்ட் ஓட்டம்பிடித்தது. பூரன்சிங் வண்டியில்பூட்டியிருநத குதிரைகள் வார்களை யறுத்துக்கொண்டு வண்டியைத் தவிடுபொடியாக்கின. ஒரு ஆபீஸருடைய குதிரைமிகவும் கடுமையாய்க் கொட்டப்பட்டபடியால் அது கீழேவிழுந்துவிட்டது, அந்தவண்டுகள் அந்தக் குதிரையைச் சுற்றிச் சுற்றிவந்து கொட்டிக்கொட்டி அலுக்கிறவரையில் அதைவிட்டுப்போகவில்லை. ஒருபக்கத்தில் துரைசாணிகளும் குழந்தைகளும் கூச்சலிடுவதும், மற்றொருபக்கத்தில் குதிரைகள தலைகால்தெரியாமல் ஓடுவதுமாய், கலபை மிகுதியாயிருந்தது. டோரா திருச்சபைக்கு வைஸ்ராய் அவர்கள் போனது நெடுங்காலம்வரையில் அவருடைய ஞாபகத்தை விட்டு அகலாது. தேவாராதனை நடக்கவில்லை யென்று நான் சொல்லவேண்டுவதில்லை.—

(Statesman.)

**ரஷியன்சமாச்சாரம்.**—பாடுவுக்கும் உஜன் ஆடாவுக்கும் நீராவிஎந்திரமார்க்கம் தடையின்றி பூர்த்தியாய் அமைந்திருப்பதினால், திரான்ஸ் காஸ்பியன் ரெயில்வேமார்க்கமாய் பக்காரன் பஞ்சு உஜன் ஆடாவுக்கு திரளாகக்கொண்டுவரப்படுகிறது, அவ்விடத்திலிருந்து பட்டோமுக்கும் செபஸ்டபூலுக்கும் அனுப்பப்படுகிறது, அங்கங்கிருந்து மாஸ்கோவுக்கும் அனுப்பப்படுகிறது. கட்டுகள் வெகுதிட்டமாய் பந்தனை செய்யப்படுகின்றன.

ரஷிய வர்த்தகர்கள் மத்திய ஏஷியாவிலுள்ள பலதேசங்களில், ரஷியன்-டர்கிஷ்-பெர்ஷியன் பாஷைகளிலேதுபாசித்தனஞ் செய்கிறவர்கள் இல்லாமையினாலே தங்கள் வியாபாரம் மிகவும் அடைபட்டிருக்கிறதென்றுதெரிந்துகொண்டபடியால், வேண்டியிருக்கும் துபாசிகளை பயிற்றுவிப்பதற்காக ரஷியாவைச் சேர்ந்த அந்தந்த அந்நியபிரதேசத்தில் இதற்கென்றுபாடசாலைகள் ஏற்படுத்தும்படி, அந்நியதேச காரியங்களுக்காக ஏற்பட்டிருக்கும் ரஷியன் மந்திரியையும் பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் மினிஸ்டரையும் கேட்டுக்கொள்ளவேண்டியவர்களானார்கள்.

சென்றவருஷம் வசந்தருதுவிலே ரஷியஇராச்சியமந்திரியானவர், மத்தியஏஷியாவிலுள்ள ரஷியபட்டணங்களாகியபாவ்லொதாருக்கும் செமிபாலாடின்ஸ்கினுக்கும் போய், அவ்விடங்களிலே வனாந்தர மணல் வந்து விழுகிறதற்குக் காரணங்களை அதிநுட்பமாய் கவனித்தறிந்து, பயமுறுத்துகிற அந்த அபாயம் சரியாய் எவ்வளவு விஸ்திரணத்திற்குப் பரவுகிறதோ அதைக்குறித்து ரிபோர்ட் பண்ணும்படிக்கும், என்னசெய்தால் அந்தத்துன்பம் நிவாரணையாகுமோ அந்தவகையை யெடுத்துச்சொல்லும்படிக்கும் காட்டு விசாரணை அதிகாரிக்கு உத்தரவு செய்தார்கள். அந்த அதிகாரி யிப்போது விசாரணைமுடித்து, பிந்திய பட்டணத்தின் விஷயத்தில், இனி அப்படி மணல் வந்து அடையாதபடி தடுப்பதற்கு சுமார் பத்து ஏகார அளவுக்கு தாழை மடல் நடவேண்டுமென்றும், முந்திய பட்டணத்தின் நிலைமை பின்னுங்கெடுதியா யிருக்கிறபடியால், இரிட்டிஷ்நதிக்கரைகளில் குச்சுகள்நாட்டி உடைப்புகளைத்துத்து பந்தோபஸ்துசெய்யவேண்டுமென்றும், இந்தவகைகளைச் செய்துமுடிப்பதற்கு தம்முடைய மதிப்பு ஐம்பதினாயிரம் ரூபா ஆகுமென்றும் அறிக்கை செய்திருக்கிறார்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174
Dayaraja Moodelly Street,—Madras.